பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 06 வெள்ளிக்கிழமை 20.01.2023 கதிர் 326

## பதவி விலகினார் முஜிபுர் ரஹ்மான்



கொழும்பு மாநகர சபையில் போட்டி

கொழும்பு, ஜன 20

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் முஜிபு ரஹ்மான் எம்.பி. பதவியிலிருந்து இன்று விலகினார். 2

# 13ஐ முழுமையாக அமுல்படுத்த இலங்கைக்கு இந்தியா அழுத்தம்

## ஜனாதிபதியிடம் ஜெய்சங்கர் பகிரங்கமாக வலியுறுத்து



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு இந்தத் தடவை பகிரங்கமாகவே அழுத்தம் கொடுத்துள்ளது இந்தியா. மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதும் அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு மிகவும் முக்கியமானது என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. 2

## 900 கிலோ மஞ்சளுடன் 4 பேர் கடலோரம் கைது

குருநகர், மண்டைதீவருகே கடற்படை நடவடிக்கை





(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டதாக நம்பப்படும் 986 கிலோ மஞ்சளை கடற்படையினர் இன்று கைப்பற்றினர். குருநகர் மற்றும் மண்டைதீவில் மேற் கொள்ளப்பட்ட சோதனைகளின் போது இவை சிக்கியதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

மண்டைதீவில் 2

## இ.தொ.காவின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக ஜெய்சங்கர் உறுதி



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெற்றது.

இதன்போது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ள 10 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை 2

## யாழ். மாவட்ட செயலகத்தில் பொலிஸ் பாதுகாப்பு தீவிரம்



(இ.கலையமுதன்)

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்ய வரும் அரசியல் 2

## மண்மேடு சரிந்து இளம் பிக்கு சாவு!

மண்மேடு சரிந்து விழு[ந்]ததில் 18 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவர் பலியாகியுள்ளார்.

பேராதனை, ஏந்தடுவா[வ] புராதன விகாரை வளாகத்திலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமாலைவிகாரையின் மேல் முற்றத்தில் குறித்த தேர வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே மண் மேடு சரிந்து விழுந்துள்ளது. 8

# இந்தியாவின் உதவியாலேயே ஓரளவுக்காகவது மீண்டோம்!

## அலி சப்ரி நேற்று உருக்கம்



பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை ஓரளவு மீண்டிருப்பதற்கு இந்தியாவின் உதவியே மிக முக்கிய காரணம் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதிலிருந்து தற்போது ஓரளவு மீண்டுள்ளோம். இதற்கு மிக முக்கிய காரணம் இந்திய அரசின் உதவிதான். இது மிகைப் படுத்தும் வார்த்தை அல்ல.

அத்தியாவசியப் பொருட்கள், மனிதாபிமான 8



## பசுமை இயக்கம் நல்லூரில் போட்டி

(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர் பிரதேச சபைத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியி[ட] கட்டுப்பணம் செலுத்தியது. 8

## 13ஐ.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதனை நேரில் வலியுறுத்தினார். அத்தோடு தனது வலியுறுத்தலைப் பகிரங்கமாகவும் அவர் வெளிப்படுத்தினார். இரண்டுநாள் பயணமாக கொழும்பை நேற்று வந்தடைந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இன்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் இந்தச் சந்திப்பில் உடனிருந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியிலான உறவுகள் பற்றியும், தற்போதைய பொருளாதார நெருக்கடி பற்றியும் இருதலைவர்களும் விரிவாகக் கலந்துரையாடினர்.

இந்தியா வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பையும் ஜெய்சங்கர் நேரில் ரணிலிடம் கையளித்தார். அதன் பின்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இணைந்து கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைக்கப்பட்டது என இந்திய வெளிவிவகார அமைச்சர் அந்தச் சந்திப்பில் பகிரங்கப்படுத்தினார். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்துவத்தையும் அவர் இடித்துரைத்தார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதும், மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதும் அரசியல் அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு மிகவும் முக்கியமானது.

இந்தியா இலங்கையின் நம்பகமான அண்டை நாடு, நம்பகமான பங்காளி, இலங்கைக்குத் தேவை ஏற்படும்போது, எந்தத் தொலைவுக்கும் செல்லத் தயாராக உள்ள ஒரு நாடு.

எனது இலங்கைப் பயணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாகும். இலங்கைக்குத் தேவைப்படும் நேரத்தில் இந்தியா தொடர்ந்து துணை நிற்கும். திருகோணமலையை ஒரு வலுசக்தி மையமாக மேம்படுத்தும் திறன் இலங்கைக்கு உள்ளது. அத்தகைய முயற்சிகளுக்கு நம்பகமான பங்காளியாக இந்தியா தயாராக உள்ளது.

ஒத்துழைப்பை முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதுப்பிக்கத்தக்கச் சக்தி கட்டமைப்புக்குக் கொள்கை அடிப்படையில் இன்று இணக்கம் எட்டப்பட்டது – என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மேலும் தெரிவித்தார்.

## பதவி விலகினார்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கே இவ்வாறு பதவி விலகுகின்றார் என்று அவர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அத்துடன், தனக்கு வாக்களித்து சபைக்கு அனுப்பி வைத்த கொழும்பு மாவட்ட மக்களுக்கு அவர் நன்றியும் தெரிவித்தார்.

## இ.தொ.காவின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவுப்படுத்த மாற்று பொறிமுறை ஒன்று முன்னெடுக்க வேண்டும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் மலையக மக்கள் வெளிமாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் வேலைக்காகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மலையகத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான புதிய திட்டங்களை இந்தியா அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், கட்சியின் பொதுச்செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன், இ.தொ.காவின் சட்ட பிரிவு பொறுப்பாளர் மாரிமுத்து, இ.தொ.காவின் ஆலோசகர் மதியுகராஜா, சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்தில் இந்தியா வழங்கிய உதவிகளுக்கு இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பொருளாதார சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வது குறித்தும், தொடர்ந்தும் இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்றும் இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## 900 கிலோ.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காண்காணிப்பிலிருந்த கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான டிங்கிப் படகைச் சோதனையிட்டபோது அதிலிருந்து 496 கிலோ ஈர மஞ்சளை (14 சாக்குகள்) கைப்பற்றினர். படகைக் கைப்பற்றிய படையினர் அதிலிருந்த இருவரையும் கைது செய்தனர்.

கடற்படையினரைக் கண்டதும் கடலில் தூக்கிவீசப்பட்டதாகக் கூறப்படும் 48 கிலோ நிறையுடைய ஒரு சாக்கு மஞ்சளையும் கடற்படையினர் மீட்டனர்.

அதேபோன்ற குருநகருக்கு அப்பால் சந்தேகத்திற்கிடமான டிங்கிப் படகைச்சோதனையிட்ட கடற்படையினர் அதிலிருந்து 445 கிலோ மஞ்சளைக் கைப்பற்றினர். 12 சாக்குகளில் பொதி செய்யப்பட்டிருந்த மஞ்சளுடன் படகையும் கைப்பற்றிய படையினர் சந்தேக நபர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் பகுதியை சேர்ந்தவர்கள். 30 முதல் 50 வயதுக்குட்பட்டவர்கள். சந்தேகநபர்கள், மஞ்சள் மற்றும் 02 டிங்கி படகுகள் என்ன யாழ். சுங்க அலுவலகத்தில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படுகிறது.

## யாழ்.மாவட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள், சுயேச்சை குழுக்கள் பேரணியாகவோ பெருந்திரளாகவோ வருவதை தடுக்கும் வகையில் வீதியின் இருபுறமும் தடைகள் போடப்பட்டு பொலிசார் கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கான கட்டுப்பணத்தை வைப்பிலிடுவதற்கான காலக்கெடு இன்று மதியம் 12 மணியுடன் நிறைவடைந்தது. வேட்புமனுக்கள் நாளை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## ரணிலின் வேடிக்கை!

அண்மைக் காலமாக அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார். இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு மட்டும் பிரச்சினையில்லை, மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள், ஒதுக்கப்பட்ட சிங்களவர்கள் என்று எல்லோருக்கும் பிரச்சினையிருக்கிறது. அவர்கள் அனைவருக்கும்கூடத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்து வருகின்றார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜம் இயத்துல் உலாமா சபையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசியபோதும் அவர் இதனை வலியுறுத்தினார். வடக்கு கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று ஒவ்வொருவருக்கும் தனித் தனிப் பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் ஒவ்வொருவருடனும் தனித் தனியாகப் பேச்சு நடத்தி வருகின்றோம், பிரச்சினைகளைக் கட்டம் கட்டமாகத் தீர்ப்போம் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்குப் பொங்கல் விழாவிற்கு வந்திருந்த சமயமும் இதுபோன்றே இந்த நாட்டில் அனைத்துத் தரப்பினருக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன அனைத்துக்கும் தீர்வு காணப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நாட்டில் தமிழர்கள் 60 ஆண்டகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக தமது பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தி வருகின்றார்கள். அப்போதெல்லாம் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுக்களையும் அரச தலைவர் ஆணைக்குழுக்களையும் நியமித்தும் அனைத்துக் கட்சிப் பேச்சுக்களை நடத்தியும் வந்த சிங்கள அரசியலின் வாரிசான ரணில் விக்கிரமசிங்க, இப்போது அனைவருக்கும் தனித் தனியான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதால் அனைவருடனும் தனித் தனியாகப் பேச்சு நடத்துகின்றோம் என்கிறார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த கணக்காக அவருக்கு இப்போது கிடைத்திருக்கும் அரச தலைவர் பதவிக்கு முன்பாக, 2015ஆம் ஆண்டு மக்கள் ஆணையோடு மைத்திரிபால சிறிசேனவோடு கூட்டுச் சேர்ந்து அவர் அமைத்த ஆட்சியின்போதுகூட தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டங்களையே அவர் கூட்டியிருந்தார். போதாததற்கு ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தையும் அரசியல் பேரவையாக மாற்றி தீர்வுக்கான புதிய அரசமைப்பை உருவாக்கவும் முயன்றிருந்தார். அப்போதெல்லாம் இந்த நாட்டில் ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித் தனியான பிரச்சினைகள் இருக்கின்றன என்று அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

இப்போது தமிழ்த் தலைவர்கள் பேச்சை விட்டுவிட்டு நல்லிணக்கத்தைச் செயலில் காட்டுங்கள் என்று நெருக்குகின்றபோதுதான் நாட்டில் அனைத்துத் தரப்பினருக்கும் தனித் தனியான பிரச்சினைகள் இருக்கின்றன என்பது ரணிலுக்குத் தெரிய வந்திருக்கின்றது. இத்தனை ஆண்டுகளாகத் தமிழர்கள் தம்முடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தியபோது அதை நிறைவேற்ற முடியாமல்போன ரணில், இப்போது ஒவ்வொருவருடனும் தனித் தனியாகப் பேசி அனைவருக்கும் தீர்வை வழங்கப்போகின்றேன் என்று கூறுவது வேடிக்கை, வினோதம்.

பொறுப்பத் தட்டிக்கழித்து, சாட்டுப்போக்குச் சொல்லும் தந்திரம் மட்டுமே!

## ஜீவனுக்கு அமைச்சுப் பதவி வெடி கொளுத்தி ஆரவாரம்

ஜீவன் தொண்டமான் அமைச்சராக பதவி யேற்றதையடுத்து மலையகத்தில் அவரது ஆதரவாளர் கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்று (வியாழக்கிழமை) நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.



இதனை கொண்டாடும் விதமாக ஹற்றன் மற்றும் கொட்டகலை பகுதியில் பட்டாசு வெடித்தும், இனிப்பும் வழங்கியும் மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## சோமாலிய கடற்கொள்ளையர்போல ஆட்சியை கைப்பற்றி வைத்துள்ளனர்

### ஜேவிபி தலைவர் அநுரகுமார விளாசல்



சோமாலிய கடற்கொள்ளையர்கள் கப்பலைக் கைப்பற்றியுள்ளதை போன்று அரச தலைவர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றி தேர்தலை நடத்தாமல் பலவந்தமாக ஆட்சியில் இருக்க முயற்சிக்கிறார்கள். அதற்காகத்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டு 3600 பில்லியன் ரூபா அரச வருமானத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. அரசாங்கத்தின் ஒரு நாளுக்கான அரச வருமானம் 800 கோடி ரூபாவாகும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு 1000 கோடி ரூபா தேவைப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்த ஆயிரம் கோடி ரூபா நிதியை திரட்டிக் கொள்ள முடியா விட்டால் இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களை வீட்டுக்கு அனுப்பவே தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது.

சிறந்த நோக்கத்துக்காக தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் கொண்டு வரப்படவில்லை. தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகப்பூர்வமாக விடுக்கப்பட்ட பின்னர் தேர்தல் சட்டத்தை மாற்றியமைக்கும் செயற்பாடு உலகில் எங்கும் இடம்பெறா. தேர்தலைப் பிற்போட அரசாங்கம் மேற்கொள்ளாத குறுக்கு வழிகள் ஏதும் இல்லை என்று குறிப்பிட முடியுமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது, அவர் 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதி நாட்டை நிர்வகிக்க அல்ல குறைந்தபட்சம் நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட பதவி வகிக்கும் அதிகாரத்தை மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கவில்லை. இந்த நாடாளுமன்றத்துக்குக்கூட மக்களாணை கிடையாது.

அரசமைப்பு ஊடாகத் தேர்தலைப் பிற்போட ஜனாதிபதி, பிரதமர் சூழ்ச்சி செய்தால் மக்கள் போராட்டம் தீவிரமடையும். உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியாவிட்டால் அவர்களுக்கு வழங்கும் சம்பளத்தையும், வரப்பிரசாதத்தையும் பகுதியளவில் குறைக்கலாம். தமது அரசியல் தீர்மானத்தை வெளிப்படுத்த மக்களுக்கு இடமளிக்காவிட்டால் அது பெரும் விளைவுகள் ஏற்படும்.

டீல் அரசியல் ஊடாக ஆட்சியில் இருக்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் முயற்சித்தால் அவர்கள் வெகுவிரைவில் குப்பை கூட்டைக்குள் தள்ளப்படுவார்கள். மக்களாணையை முடக்க அரசியல் டீல் செய்தால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் டீல் செய்வார்கள் என்பதை அரச தலைவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

## தேர்தல் பரப்புரைக்கு அரச சொத்துக்கள் பயன்படுவதை தடுக்க பவ்ரல் வலியுறுத்து

அரச சொத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சூழலை உருவாக்குவதற்கான படிமுறைகளை மேற்கொள்ளுமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பால் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு

உள்ளூராட்சி சபை தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட வேளையிலிருந்து இதுவரை உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் வாகனங்களைப் பயன்படுத்தல், அபிவிருத்திக் கருத் திட்டங்களைத் திறந்து வைத்தல் மற்றும் நலன்புரித் திட்டங்களை மேற்கொள்ளல் போன்றவற்றைத் தமது கட்சியின் வேட்பாளர்களின் பரப்புரைக்காகப் பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தற்போது அவர்கள் தொழிநுட்ப ரீதியாக வேட்பாளர்களாக இல்லாததுடன், தற்போதுள்ள சபை உறுப்பினர்களில் அதிகமானவர்கள் எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களாக நியமனம் பெறுகின்றமை பொதுவான நிலைமையாகும்.

அத்துடன், இவர்கள் தேர்தல் முடிவடையும் வரைக்கும் சபைகளின் வளங்கள் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.

இந்நிலைமையைத் தடுப்பதற்கு ஆரம்பத்திலிருந்தே கட்டுப்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு இல்லாவிடின் தேர்தலில் போட்டியிடுவதற்கான சமத்துவம் இழக்கப்படும். அதனால், இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், நகர ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களைத் தெளிவுபடுத்தி உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வளங்கள் மற்றும் சொத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சூழலை உருவாக்குவதற்கான படிமுறைகளை மேற்கொள்ளுமாறு தங்களிடம் வேண்டிக் கொள்கின்றோம். – என்றுள்ளது.

# உசைன் போல்ட்டின் கோடி டொலரை ஆட்டையைப் போட்ட நிதி நிறுவனம்




மின்னல் வேக ஓட்டக்காரர் என அறியப்படும் தடகள வீரர் உசைன் போல்ட்டை ஏமாற்றி ஒரு கோடிக்கும் அதிகமான டொலர் பணத்தை மோசடி செய்திருக்கிறார்கள் என்று அவரது வழக்கறிஞர் உறுதி செய்துள்ளார். ஜமைக்காவை சேர்ந்தவர் உசைன் போல்ட். 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம், 4மு100 ரிலேவில் உலக சாதனை படைத்தவர். 2008, 2012, 2016 என தொடர்ந்து மூன்று ஒலிம்பிக்கில் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர். 2017- ஓய்வு பெற்றார்.

தனது நாட்டில் கிங்ஸ்டன் நகரில் இயங்கி வரும் நிதி முதலீட்டு நிறுவனம் ஒன்றில் அவரது கணக்கில் இருந்த 12.7 மில்லியன் டொலர்கள் மாயமாகி உள்ளன. தற்போது அந்த கணக்கில் வெறும் 12 ஆயிரம் டொலர்கள் மட்டுமே இருப்பதாக அவரது வழக்கறிஞர் லின்டன் கார்டன் தெரிவித்துள்ளார்.

அந்த நிறுவனம் தங்களது நிதியைத் திரும்பத் தராத பட்சத்தில் நீதிமன்றத்தை நாடும் திட்டம் தங்களுக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது மிகப்பெரிய ஏமாற்றம். இந்த மோசடியில் இருந்து போல்ட் தனது பணத்தை வெற்றிகரமாக மீட்பார் என தான் நம்புகிறார் என்றும் வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தங்கள் நிறுவனத்தில் முன்னாள் ஊழியர் ஒருவர் மோசடி செய்து பல்வேறு கணக்குகளில் இருந்து பணத்தை தவறான வழியில் கையாண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் குறித்து ஜமைக்கா நாட்டின் நிதி மோசடி தடுப்புக் குழு விசாரித்து வருவதாக தகவல். இந்த மோசடியால் போல்ட் மட்டுமல்லாது பல்வேறு தனி நபர்கள் பாதிக்கப்பட் டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



## கார் சீட் பெல்ட் விவகாரம் மன்னிப்புக் கேட்டார் ரிஷி

காரில் சீட் பெல்ட் அணியாமல் பயணித்தமைக்காக இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இங்கிலாந்தில் காரில் சீட் பெல்ட் அணியாமல் செல்வது தண்டனைக்குரிய குற்றம். இதற்கு உடனடி அபராதம் விதிக்கப்படுகிறது. அதை கட்ட தவறியவர்கள் நீதிமன்றம் மூலம் அதிக அபராதம் செலுத்த நேரிடும்.

இந்தச் சூழ்நிலையில் அந்த நாட்டுப் பிரதமர் ரிஷி சுனக் காரில் சீட் பெல்ட் அணியாமல் சென்ற வீடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது. நாடு முழுவதும் 100-க்கு மேற்பட்ட புதிய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் சமூக ஊடகங்களில் விளம்பரபடுத்துவதற்காக வடமேற்கு இங்கிலாந்தில் இந்த வீடியோ எடுக்கப்பட்டது. அதில் ரிஷி சுனக் காரில் பயணித்தப்படி கேமிராவை பார்த்து பேசுவது போன்று இருந்தது.

அவரது காரின் முன்னும் பின்னும் போலீசார் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்புக்காகச் சென்றனர். இதில் பிரதமர் ரிஷி சுனக் காரில் சீட் பெல்ட் அணியாமல் சென்றார். இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இந்த செயலுக்கு ரிஷி சுனக் மன்னிப்பு கேட்டு உள்ளார் என அவரது செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஒரு சிறிய கிளிப்பை படமாக்க பிரதமர் தனது சீட் பெல்ட்டை கழற்றினார். இது தவறு என்பதை அவர் முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்காக மன்னிப்பு கேட்டு உள்ளார் என்று அவர் கூறினார். மேலும் காரில் செல்லும்போது அனைவரும் சீட் பெல்ட் கட்டாயம் அணிய வேண்டும் என பிரதமர் நம்புகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

## இராமர் பாலம் புராதன சின்னம் அறிவிக்க இந்தியா நடவடிக்கை

### உச்ச நீதிமன்றத்தில் அரசு சார்பில் தெரிவிப்பு

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாக்கு நீரிணையில் உள்ளதாக நம்பப்படும் ராமர் பாலத்தை தேசிய புராதனச் சின்னமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய நடுவண் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ஆதம் பிரிட்ஜ் என்று அழைக்கப்படும் இந்தப் பகுதி தமிழகத்தின் பாம்பனுக்கும், இலங்கையின் மன்னார் தீவுக்கும் இடையே, கடலுக்குள் 50 கி.மீ. நீண்டுள்ளது. இந்தப் பாலம், சீதையை மீட்க ராமர் கட்டிய பாலம் என்று புராணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது 2005-ஆம் ஆண்டில் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 'ராமர் பாலத்தை தேசிய புராதனச் சின்னமாக அறிவிக்கவேண்டும். சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும்' என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், சேது சமுத்திரக் கால்வாய் திட்டப் பணிகளுக்கு தடை விதித்து 2007 ஆ-ம் ஆண்டில் உத்தரவிட்டது. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்த வழக்கை விரைந்து விசாரிக்கவேண்டும் என்று சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் புதிதாக மனு தாக்கல் செய்தார். இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை வேகம் பெற்றது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா அமர்வு முன் நேற்று மீண்டும் வழக்கு விசாரணை நடைபெற்றது. அப்போது மத்திய அரசுத் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா நீதிமன்றில் முற்பட்டு, " ராமர் பாலத்தை தேசிய புராதனச் சின்னமாக அறிவிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விவகாரத்தை நடுவண் அரசு மிகவும் கவனமாகப் பரிசீலித்து வருகிறது. இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்கப்படும். மனுதாரர் சுப்பிரமணியன் சுவாமி, அரசிடம் கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம்' என்று தெரிவித்தார்.



# பிரதமர் மோடி பற்றிய பிபிஸியின் ஆவணப் படத்துக்கு இந்திய நடுவண் அரசு கண்டனம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறித்து லண்டன் பிபிசி ஊடகம் ஓர் ஆவணப்படம் தயாரித்துள்ளது. இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது இந்திய அரசு, காலனியாதிக்க மனோபாவத்துடன் ஆவணப்படம் உருவாக்கப்பட்டிருப்பதாக விமர் சித்துள்ளது. இந்த ஆவணப் படம் குறித்து பிரிட்டிஷ் பிரதமரும் தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்.

2002ஆ-ம் ஆண்டு நிகழ்ந்த குஜராத் கலவரத்தோடு, அப்போது முதல்வராக இருந்த நரேந்திர மோடியை தொடர்புபடுத்தி பிபிசி ஆவணப்படம் தயாரித்துள்ளது. 'இந்தியா: மோடிக்கான கேள்விகள்' எனும் தலைப்பிலான இந்த ஆவணப்படம் இரண்டு பாகங்களாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தில், "இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இந்தியாவின் முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் இடையே இருக்கும் பதற்றங்களை பாருங்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட 2002 குஜராத் கலவரத்தில் நரேந்திர மோடிக்கு உள்ள பங்கு குறித்து விசாரிக்கவேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 17ஆம் திகதி இதன் முதல் பாகம் வெளியானது. 24ஆம் திகதி இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. -யுரியூப் தளத்தில் வெளியான இந்த ஆவணப் படத்தை இந்தியா தடை செய்துள்ளது.

ஆவணப்படத்திற்கு மத்திய அரசு எதிர்ப்பும் தெரிவித்துள்ளது. "இந்தியாவுக்கு எதிராக பரப்புரை செய்யும் நோக்கில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. பக்கச் சார்பான ஆவணப்படம் இது. காலனியாதிக்க மனோபாவம் இன்னமும் தொடர்வதை இது காட்டுகிறது. இந்த ஆவணப்படம் கண்ணியமானது அல்ல" என விமர்சித்துள்ளார்.

அதைப்போன்றே "ஒரு தலைவரின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதை ஏற்க முடியாது" என்று பிரிட்டிஷ் பிரதமரும் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

# விழிப்புடன் போருக்குத் தயாராயிருங்கள் சீன ஜனாதிபதி படையினருக்கு அழைப்பு

இந்திய எல்லையையொட்டி நிலைகொண்டிருக்கும் சீனப் படையினரைப் போருக்குத் தயாராக இருக்குமாறு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சீன அரசு ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இந்திய – சீன எல்லையில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வரும் வீரர்களுடன் காணொலி காட்சி வாயிலாக அதிபர் ஜி ஜின்பிங் உரையாற்றினார். ஜின்ஜியாங் மாகாணப் படைத் தலைமையின் கீழ் இயங்கும் பகுதியான குன்ஜெராப் எனும் எல்லைப் பகுதியில் பணியாற்றும் படையினர் மத்தியிலேயே அவர் உரையாற்றினார்.

தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள மக்கள் விடுதலைப் படையின் தலைமையகத்தில் இருந்தவாறு அவர் நிகழ்த்திய அந்த உரையின்போது, தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் போருக்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.கடந்த சில ஆண்டுகளாக இந்திய எல்லையை ஒட்டிய பகுதியில் சூழல் எவ்வாறு மாறி வருகிறது என்பது குறித்தும், தொடர்ச்சியான இந்த மாற்றங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பது குறித்தும் படையினரிடம் அவர் கேள்வி எழுப்பினார். சீனக் கடற்படை மற்றும் விமானப்படையினர் மத்தியிலும் உரையாற்றிய ஜி ஜின்பிங், விழிப்புடனும் தயார் நிலையிலும் இருக்குமாறு அவர்களுக்கு உத்தரவிட்டார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதமுனையில் நூல் வெளியீடு




புத்தளம் எம்.எச். அப்துர் ரஷீத் எழுதிய 'திருமண உறவும் கண்குளிரும் வாழ்வும்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வு மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனை கிளை நண்பர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த விழா இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. எம்.எம்.பைறோஸ் தலைமையில் நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலாளரும் முன்னாள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான சட்டத்தரணி, ஏ.எம்.லத்தீப் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார். நூல் ஆய்வுரையை ஓய்வு பெற்ற பேராசிரியர், கலாநிதி. அஷ்செய்க். எம்.எஸ்.எம். ஜலால்தீன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி. மஸ்றூபா மஜீத் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இந்த நூல் கணவன் – மனைவி – பிள்ளைகள் மற்றும் சொந்த உறவுகளை சீரமைப்பதற்கான ஒரு வழிகாட்டல் நூலாகும்.



தம்பலகாமத்தில் பிரதேச செயலக ஊழியர்கள் அறுவடையில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்

# தம்பலகாமத்தில் சிறப்புற்றது அறுவடைப் பொங்கல் விழா

பாரம்பரிய அறுவடையுடன் கூடிய பொங்கல் விழா தம்பலகாமத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பிரதேச செயலகம் இந்தப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி அவர்களின் தலைமையில் நேற்று இடம் பெற்ற விழாவில் புதிர் எடுத்தல், நன்றிப் பிரார்த்தனை, கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன.

பிரதேச செயலகத்தில் இருந்து மாட்டு வண்டிகளுடன் வயல் நிலப்பகுதிக்குச் சென்ற விருந்தினர்களும் அரச பணியாளர்களும் அங்கு புதிர் எடுத்தனர். இந்தப் பவனியில் பாரம் பரிய கலை கலாசார நிகழ்வகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து பிரதேச செயலக வளாகத்தில் சூரிய பகவானுக்கு நன்றி செலுத் தும் வகையில் விசேட பூசை இடம் பெற்றது. சுவாமி மலை பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் மோகன சர்மா அதனை நடத்திவைத்தார். மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் உட்பட பதவி நிலை உத்தி யோகத்தர்கள், உத்தி யோகத்தர் கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளியில் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், பெற்றோர்கள் மாணவர்களைக் கட்டாயம் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்று வலியு றுத்தினார்.

"பொருளாதார நெருக்கடியை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இந்த நிலையிலும் பாடசாலைக் கல்வியை மாணவர்கள் இடைநடுவில் கைவிடக்கூடாது. எமது நாட்டில் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கிறது. பெற்றோர்கள் பிள்ளைகளை கட்டாயம் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். மாணவர்களுக்கு தேவையான உணவு, சீருடை போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் தற்போதைய சூழலில் சில பெற்றோர்களுக்கு சவால்கள் இருக்கலாம். அவற்றை வெற்றி கொள்வதற்கான மாற்று வழிமுறைகளைக் கண்டறியவேண்டும். அப்போதுதான் எமது சமூகத்தையும் இந்த பிரதேசத்தையும் முன்னேற்ற முடியும்" என்றார் அவர்.

பிரதேச செயலகத்தின் சிறுவர் மேம்பாட்டு பிரிவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதிதிகளினால் கற்றல் உதாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் சேவையாற்றியோருக்கு நயப்பு விழா

அன்மைக்காலமாக சகல துறைகளிலும் பல்வேறு சாதனைகளை நிலை நாட்டி வரும் அம்பாறை மாவட்டம் ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பல் துறை சார்ந்தோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.

வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்று சென்ற ஆசிரியர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக இந்தப் பணி நயப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டி



ருந்தது. அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் பாடசாலை அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் விழா நடைபெற்றது.

ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களான ஈ.எல்.மன்சூர், எஸ்.எல். ஜஹ்பர் ஆகியோரும், அதிபர் சேவையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏ.எல்.எப்.டில்ஸா ரோஸ், எம்.ரி.ஸியாத் ஆகியோரும், இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களான எம்.வி. முபாரக், ஏ.ஏ.பர்சானா, யு.எல்.ஏ.மஜீத்,எம்.ரி. பஸ்லி, எம்.எஸ்.நிஹால் முஹம்மட், எம்.பி.எஸ்.எப். ஸிபா,எஸ்.ஆர்.எம் .தஸ்லீம், ஏ.எல்.றுமைஸா, ஏ.எல். தௌபீக், இஸட்.எம். நிலாம் ஆகியோரும், இடமாற்றம் பெற்றுச் சென்ற கல்விசாரா ஊழியர்களான எஸ்.அபூபக்கர், ஐ.ஏ.ஸிராஜ்,வை.வி. றிஸ்வி, ஏ.எம். அஸ்ஹர் ஆகியோரும் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டார்கள்.

# முன்னாள் புலிகள் காரைதீவில் போட்டி

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேசசபையில் சுயேச்சையாகக் களமிறங்கும் முகமாக நேற்று வேட்புமனு கையளித்தது.

கடந்த சனிக்கிழமை சுயேட்சைக் குழுவுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்ட நிலையில் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு கையளிக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா, முதன்மை வேட்பாளர் செல்வநாயகம் ரசிகரன் மற்றும் கட்சி சார்பான வேட்பாளர்களும் வேட்புமனுத் தாக்கலுக்கு வருகை தந்திருந்தனர்.

# கல்முனை நகரசபைக்கு வேட்புமனுகள் ஏற்பதற்கான தடை மார்ச் வரை நீடிப்பு

கல்முனை மாநகர சபைக்கான உள்ளூராட்சி மன்றத்தேர்தல் வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கு உயர் நீதிமன்றம் விடுத்த இடைக் கால தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. கல்முனை மாநகர சபைக்கான உள்ளூ ராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கப் படுவதை இடைநிறுத்தி நேற்று உயர் நீதிமன் றம் இடைக்காலத் தடை உத் தரவு பிறப்பித்திருந் தது. சாய்ந்தமருது பகுதிக்குத் தனியான பிரதேச சபையை ஏற்படுத்தும் நடிக் கையை இடைநடு வில் விட்டு விட்டு கல்முனை மாநகர சபைத் தேர்தலை நடத்துவது தனது அடிப்படைய உரிமையை மீறும் செயல் என்று எம்.ஏ. மொஹா மட் சலீம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. நேற்று வியாழக்கிழமை குறித்த மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது தமது இடைக்கால உத்தரவை வழக்கு விசாரணை முடியும் வரை நீடிப்பதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது. வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி மீண்டும் இடம்பெறும்.



யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட மற்றும் அரச அதிபரை படத்தில் காணலாம்

# யாழ். அரச அதிபருடன் படை அதிகாரிகள் சந்திப்பு

யாழ். மாவட்டத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள அரச அதிபரை மாவட்ட தரைப்படைக் கட்டளை அதிகாரி மற்றும் பொலிஸ் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினர்.

வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த குணரட்ண, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன ஆகியோர் காலை 10.30 மணிக்குயளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து தமது அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தினர்.

அதற்கு முன்னதாகக் காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட அரச அதிபரைச் சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாதுள்ள காணிகள் தொடர்பாகவும் முகாம்களில் தொடர்ந்தும் தங்கியுள்ள மக்களை மீள்குடியமர்த்தவது தொடர்பாகவும் விவசாய உற்பத்தியை ஊக்குவித்தல் தொடர்பாகவும் பேசப்பட்டதாக மாவட்ட செயலக செய்திக் குறிப்புத் தெரிவித்தது.



# மக்களிடம் நிதி சேகரித்தே இழப்பீட்டை வழங்குவேன்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



நீதிமன்ற தீர்ப்பிற்கமைய 10 கோடி செலுத்தக் கூடிய பொருளாதார இயலுமை எனக்கு இல்லை. எனவேநாடளாவிய ரீதியிலுள்ள எனது ஆதரவாளர்களான மக்களிடமிருந்து பணத்தைச்சேகரித்துஅதன் மூலமே அந்த நட்ட ஈட்டை செலுத்துவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உயிர்த்தஞாயிறுதாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 கோடி நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு வியாழக்கிழமை சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள் தொடர்பில் நான் முன்னரே அறிந்திருக்கவில் லை என்பதை ஆரம்பம் முதலே தெரிவித்து வந்தேன். எனினும் ஊடகங்களும் மக்களும் அதனை நம்பவில்லை. தற்போது நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் இது தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு முன்னர் நான் வெளிநாடு செல்ல ஆயத்தமான போது கூட, என்னுடனிருந்த பொலிஸ்மா அதிபரால் இது தொடர்பில் எனக்கு அறிவிக்கப்படவில்லை. இந்த விடயமும் நீதிமன்ற தீர்ப்பில் உள்ளடக் கப்பட்டுள்ளது. என்னால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளால் இழைக்கப்பட்ட தவறுக்காக நான் குற்றவாளியாக்கப்பட்டுள்ளேன் என்பதே இந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னை சிறையிலடைக்க வேண்டும் எனக் கூறும் முன்னாள் இரா ணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரது காலத்தில் யுத்தத்தால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தம்மையும் மக்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாதவர்களுக்கு என்னை சிறையிலடைக்குமாறு கூறுவதற்கு அதிகாரமில்லை. தற்போதுள்ள மற்றும் இனிவ ரப் போகும் அனைத்து ஜனாதி பதிகளும் இதன் மூலம் சிறந்த படிப்பினையைப் பெற்றுக் கொள்ள முடியும். – என்றார்.



# இலங்கை போன்ற சூழ்நிலை பாகிஸ்தானிலும் ஏற்படலாம்

## முன்னாள் பிரதமர் இம்ரான் கான் எச்சரிக்கை

அரசாங்கம் சரியான நேரத்தில் தேர்தலை நடத்தவில்லை என்றால், பாகிஸ்தானில் இலங்கை போன்ற சூழல்கள் உருவாகலாம் என பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் தெஹ்ரீக் இ இன்சாபின் (பி.டி.ஐ) தலைவருமான இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான் பிபிசிக்கு அளித்த நேர்காணலில் கருத்து தெரித்ததாவது:

பொருளாதார நெருக்கடியை சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் மூலம் மட்டுமே சமாளிக்க முடியும்.

ஆளும் அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் நீடித்தால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

விரைவில் தேர்தல் நடத்தப்படாவிட்டால், மக்களிடையே சென்று பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்துவோம். என்னைத் தகுதி நீக்கம்செய்யவேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு நாளும் எனக்கு எதிராக அரசாங்கத்தரப்பினர் புதிய முறைப்பாடுகளைப் பதிவு செய்கின்றனர் – எனத் தெரிவித்துள்ளார்.

# 2 மாத நிலுவை இருந்தால் மின் இணைப்பு துண்டிப்பு

## வவுனியாவில் நடவடிக்கை தொடக்கம்

வவுனியாவில் இரண்டு மாதத்துக்கு மேல் மின்சாரக் கட்டணம் செலுத்தாவிட்டால் ஒரு மணிநேர அறிவித்தல் கொடுத்து மின்சார துண்டிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கையை மின்சார சபை உத்தியோகத்தர்கள் தொடங்கியுள்ளனர்.

குருமன்காடு, வைரவ புளியங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மின்சார நிலுவை கள் காணப்படும் வீடுகளுக்கு சென்ற மின் சாரசபை உத்தியோகத்தர்கள் மின்சாரத்துண் டிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இரண்டு மாதத்துக்கு மேல் தொடர்ந்து மின்சாரப் பட்டியல் நிலுவை செலுத்தாத மின் பாவனையாளர்களிடம் மின்சார நிலுவைகளை ஒரு மணித்தியால கால அவகாசத்தில் செலுத்திக்கொள்ளுமாறும் அவ்வாறு செலுத்தத் தவறியவர்களின் வர்த்தக நிலையங்கள் வீடுகளுக்கு மின் சாரத்துண்டிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வுள்ளதாக அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளார்கள். இதையடுத்து மின் பாவனையாளர்கள் தமது மின்சார நிலுவைகட்டணங்களும் செலுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். தற்போது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மாலை மற்றும் இரவுவேளைகளில் இரண்டு மணித்தியாலங்கள் இருபது நிமிடங்கள் மின்சார துண்டிப்பு நாடளாவிய ரீதியாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்த புதிய சட்டமூலம் தடையாக இருக்காது!

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் தடையாக இருக்காது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் 61 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 97 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் கிடைத்தன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய எதிர்க் கட்சிகள் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் மற்றொரு முயற்சி என குறிப்பிட்டு இந்த சட்ட மூலத்தை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன விமர்சித்திருந்தன. மேற்படி சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போது, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்தலுக்கு சட்டமூலத்தை பிரயோகிக்கக் கூடாது என எதிர்க்கட்சிகள் முன்வைத்த திருத்தத்தை ஏற்க அரசாங்கம் மறுத்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொள்ளைச் சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ். நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கரணவாய் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றதாக் கூறப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய வியாழக்கிழமை இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந் தேகநபர் மீசாலையைச் சேர்ந்த 24 வயதான நபர் எனத் தெரியவருகிறது. அத்துடன், கொள்ளைச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற் றும் ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைதான சந்தேகநபரை சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முன்னி லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## இந்தியாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகள் என 4 பில்லியன் டொலர் அளவுக்கு இந்தியா இலங்கைக்கு உதவியது. இந்த உதவிதான் இலங்கை ஓரளவு மீள மிக முக்கிய காரணம். இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு, இந்திய அரசுக்கு, இந்திய மக்களுக்கு இலங்கை அரச தலைவர் சார்பிலும் இலங்கை மக்கள் சார்பிலும் ஆழமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் அளிக்கவும் இந்தியா அளித்த உத்தரவாதமே முக்கிய காரணம். இந்தியாதான் முதன் முதலாக இலங்கைக்கு உத்தரவாதம் அளித்தது. அதற்காகவும் நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என தெரிவித்தார்.

இதையடுத்துப் பேசிய ஜெய்சங்கர், "பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை வெளிவர எவ்வாறு உதவ முடியுமோ அதை இந்தியா உடனடியாகச் செய்தது. இலங்கைக்கு உதவும் மற்ற நாடுகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்துகொள்வ தற்காக காத்திருக்காமல் இந்தியா உதவியது. இலங்கைக்கு கடன் அளிக்கும் விவகாரத்தில், சர்வதேச அமைப்புகள் தயக்கமின்றி கடனுதவி அளித்து இலங்கையின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது" என தெரிவித்தார்.

## மண்மேடு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மண்ணுக்குள் புதையுண்டு படுகாயமடைந்த தேரர் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

## பசுமை இயக்கம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஜங்கரநேசன் தலைமையிலான குழுவினர் கட்டுப்பணத்தை செலுத்தினர்.

சுயேச்சைக் குழுவின் தலைமை வேட்பாளராக பொ.ஜங்கரநேசன் களமிறங்கவுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2023 இல் வெளியிடப்பெற்றது.